**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.269/2020**

**பி.வா.சா. – 1– ஞானப்பிரகாசம்**

**நாள். 31.10.2023**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாயார் பெயர் மோட்சமேரி. அந்தோணி மற்றும் மோட்சமேரிக்கு ஞானப்பிரகாசம், தர்மராஜா, ஆரோக்கியமேரி ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். தர்மராஜா இறந்துவிட்டார். அவரது மனைவி பெயர் அல்போன்ஸ் அமிர்தம்மாள். தர்மராஜாவிற்கு ஜெர்மனியம்மாள், மரியம்மாள், சமனஸ்மேரி, ஆரோக்கியமேரி, சகாயராணி ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். என் அப்பா அந்தோணி 24.12.1975 ல் அவரது பெயரில் சொத்து வாங்கினார் என்றால் நான் வாங்கினேன். நான் 1946 ல் பிறந்தேன். அவ்வாறு நான் தான் சொத்து வாங்கினேன் என்ற விபரத்தை இந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிஸ்தி ரசீது என் அப்பா பெயரில் செலுத்தி வந்தனர் என்றால் அப்பா பெயரில் நான் செலுத்தி வந்தேன். தர்மராஜா இறந்ததற்கு பிறகு ஆரோக்கியமேரி தன்னுடைய சொத்தை பிரித்து தருமாறு என்னிடமும், மற்ற சகோதரர்களிடமும் கேட்டாரா என்றால் கேட்டார். தாவா சொத்திற்கான பட்டா (வா.சா.ஆ.5) எல்லார் பெயரிலும் கூட்டு பட்டாவாக தான் உள்ளது. என் சகோதரிக்கு 1/3 பாகம் உள்ளது என்றும், அதை பிரித்து கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொல்வது சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.10.31 19:09:26 +0530

Additional District Judge,

Dindigul.